உ

41

எகிப்தின் புரட்சி வீரர்
ஜெனரல் நகீப்

(வாழ்க்கை வரலாறு)

OF ...
6 - JUL 1955
MADRAS

எழுதியவர்:
ஏ. அருணசலம்

...ங்கலா பதிப்பகம்
... காந்திரோடு,
...ந்சிபுரம்.

★

...லை அணா 1

எகிப்தின் புரட்சி வீரர் ஜெனரல் நகீப்

துப்பாக்கிப் பிரயோகம், மந்திரி சபையை நீக்குவது, மன்னரே லஞ்ச ஊழலை சிருஷ்டிப்பது இவை சர்வ சகஜமாக உள்ள நாடு எகிப்து.

எகிப்தின் தேச சரித்திரம் மிக விநோதமானது, வேடிக்கையானது, விசித்திரமானதுங்கூட. அதன் மன்னர் காலத்திய அரசாங்கக் கொள்கைகளும், நடைமுறைகளும் தற்கால நிலைமைக்கு மாறுபட்டது. எகிப்தில் நீண்டகாலமாக மன்னர் ஆட்சி நிலைத்திருந்தது.

பல தேசங்களில் மன்னராட்சி மறைந்து மடிந்து விட்டது போல எகிப்திலும் மன்னராட்சிக்கு முதலில் சவக்குழி மட்டும் தோண்டினார்கள் இந்த செய்கைக்கு மக்களிடம் எதிர்ப்பு

இருக்கிறதா? எனபார்த்தார்கள், இல்லை என்பதை அறிந்து சவக்குழியில் மன்னராட்சியைப் புதைத்த தோடல்லாமல் சமாதியும் கட்டிவிட்டார்கள். இம்மாபெரும் காரியத்தை சாதித்தது யார்? அம் மாபுருடன் தான் முகமது நகீப் என்னும் இராணுவ வீரன்.

போர் வீரர் பரம்பரையில்

சூடான் என்பது எகிப்து தேசத்தில் இயற்கையோடு அமைந்த ஒரு பகுதி. அங்குள்ள மக்களில் பெரும்பாலோர் எகிப்திலிருந்துகுடியேறியவர்கள் சூடானின் மதம், கலாசாரம்யாவும் எகிப்தினுடைய மத கலாசாரமேதான். சூடான் 9,67,600, சதுரமைல்கள் பரப்புள்ளது. இதன் தலை. நகரம் கார்டூம் இங்குநைல்நதி தான் முக்கிய பெரியநதி

நகீபின் தாயார் சூடானில் பிறந்தவர் நகீபின் தாயார் வழிப்பாட்டனர்.

1885ல் தலைநகரான கார்டூமில் பிரிட்டி ஷாருக்கெதிராக நடைபெற்ற புரட்சி யில் பங்கு கொண்டு அமரத்வம் அடைந் தார்.

சூடானைப் பிடிக்க 1898ல் கிச்சனர் தலைமையில் சென்ற சேனையில் காப்ட ஞக யூசப் நகீப் என்பவர் இருந்தார். இவர் தன் புத்தி கூர்மையால் பிரிட்டி ஷாரிடம் நற்பெயர் எடுத்தார். இவர் சூடான் சென்ற சமயம் திருமணம் செய்துக் கொண்டார். இந்த யூசப் நகீ பிற்கு சூடானிய பெண்ணுக்கும் 9 குழந்தைகள் பிறந்தன. இந்தகுழந்தை களில் முதல் குழந்தையாக பிறந்தவர் தான் முகமது நகீப்.

நகீப்பின் தந்தை வாட் மேடானி என்னுமிடத்தில் ஜில்லா கமிஷனராக வேலைபார்த்து வந்தார். இங்கு நகீப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது பள்ளி

யில் மற்றபிள்ளைகளைக்காட்டிலும்கல்வி கேள்விகளிலும் விளையாட்டுகளிலும் முதல்வராகத்திகழ்ந்து ஆசிரியர்களிடம் நற்பெயர் சம்பாதித்தார்

நகீபின் ஆவல்

நகீபின் தந்தைக்கு மகனை வழக்கறிஞராகவோ அல்லது இராணுவத்தைத்தவிர இதர உயர் பதவியிலோ அமர்த்த வேண்டுமென்பது ஆவல். ஆனால் முகமது நகீபிற்கு அந்த பதவிகளில்நாட்டம்கொள்ளவில்லை. இராணுவத்தில் சேர்ந்து போர்வீரனாக திகழ்ந்து பலகளம் காணவே அவர் மனம் துடித்துக் கொண்டிருந்தது. இந்த எண்ணம் இருதயத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வரலாயிற்று. ஒருநாள் இரவு வீட்டில் மற்றவர்கள் ஆழ்ந்து நித்திரையில் இருக்கும் சமயம் யாருக்கும் சொல்லாமல் கெய்ரோவை நோக்கிக் கால்

நடையாகவும் வண்டி, படகுமூலமாகவும் சுமார் 1000 மைல்களைக்கடந்து கெய்ரோவை அடைந்தார் கெய்ரோவில் அவர் கண்டகாட்சிகள் மனதைக்கவர்ந்தன ஒருகாலத்தில் எகிப்தின் சர்வாதிகார ஜனதிபதியாக திகழ் வோம் என அவர் நினைத்துக்கூட இருக்கமாட்டார்.

பிறகு இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் இலாக்காவிற்கு சென்று தம் கருத்தை வெளியிட்டார் அங்குள்ள அதிகாரிகள் நகீபின் அங்கஅடையாளங்களையும் எடையையும்குறித்துகொண்டு உயரத்தைப்பார்த்தசமயம் இராணுவத்திற்கு தேவையான உயரத்திற்கு ஒரு அங்குலம் குறைவாக இருந்தார். இதனல் அதிகாரிகள் இவரை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. எதிர்பாராத விதமாக தமக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைக்கண்டு வருந்தினர் மறு

நிமிடமே மனதைத் தேற்றிக் கொண்டு தன் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

தன் கிராமத்தை அடைந்து மீண்டும் ஒரு அங்குலம் உயருவதற்காக தேகப்பயிற்சியில் ஈடுபட்டார்.

இராணுவத்தில் நகீப்

ஒருவருடத்திற்குப் பிறகு கெய்ரோ விற்குச் சென்று இராணுவத்தில் சேர பரிசீலனை செய்யப்பட்டார். மீண்டும் உயரத்தில் ½ அங்குலம் குறைந்திருந்தது நகீபிற்கு ஏமாற்றம் ஏற்பட்டது. அதிகாரி களும் யோசித்து நகீபின் விடாமுயற் சிக்காக வியந்து அவரை இராணுவத்தில் சேர்த்துக் கொண்டார்கள். நகீபின் நெடுநாளைய ஆவலும் பூர்த்தியாயிற்று, அவர் மனதும் பூரித்தது.

நகீபின் முகத்தோற்றமும் சுறு சுறுப்புடன் காணப்படும் தன்மையும்,

விடாமுயற்சியும் இராணுவ பற்றையும் இராணுவ அதிகாரிகளை கவர்ச்சிக்கலாயின 2½வருட பயிற்சியில் கற்க வேண்டியபயிற்சிக்கான தந்திரங்களை9-மாதங்களில் கற்று தேற்சி பெற்ருர்,

நகீப்தன்னுடையகட்டுப்பாடுஒழுக்கம் ஆகியவைகளின் உயர்வால் அதிகாரிகளின் கண்களில் அதிகமாக பிரகாசிக்கவும்அவர்களின் இருதயங்களில் இடம்பெறவும் ஆரம்பித்தார் இதனல் ஒருபடைக்கு நகீப் இரண்டாவது லெப்டினண்டாக நியமிக்கப்பட்டார். இது சமயம் அவருக்கு வயது 19-தான்.

எகிப்து இராணுவத்தின்பிடி இது சமயம் பிரிட்டிஷாரின் கையில்இருந்த தால் உயர் பதவிகள் யாவும் பிரிட்டிஷாருக்கே கிடைக்கலாயின. எஞ்சியதோ மிஞ்சியதோதான் எகிப்தியர் களுக்குக் கிடைக்குமென்ருல் நகீபின்

திறமையை அவர்கள் எவ்வளவு அதிக மாக அறிந்திருக்க வேண்டுமென்பது நன்கு தெரிகிறதல்லவா?

இரத்தவெள்ளத்தில் நகீப்

நகீப் ஓய்வு காலங்களை வீணில் செலவிடமாட்டார். காலம் விலை மதிக்கமுடியாதது என்று அவர் உணர்ந்தவர் ஓய்வு நேரங் களில் பிரெஞ்சு ஆங்கிலம், ஜெர்மன் இதாலி ஆகிய மொழிகளைக் கற்றூர் 1939-ல் ஆரம்பமான இரண்டாவது மகாயுத்தத்தின் சமயம் இவர் எகிப்தி லேயே தங்கி இருக்கவேண்டி இருந்தது.

பாலஸ்தீன் தகராறில் அரபுநாடு களின் சேனைகள் யூதராஜ்யமான இஸ் ரேல்மீது பாய்ந்தன இஸ்ரேல் அர சாங்கத்திற்கு அமெரிக்கா, பிரிட்டன் முதலியநாடுகளின் ஆதரவு இருந்தன.

பாவம்ஏழை அரபுகளுக்குஇந்த் ஆதரவு அதிகமில்லை.

யூத ராஜ்யத்தை ஒழித்துக் கட்ட எகிப்திய சேனை இஸ்ரேல் மீது படை எடுக்க வேண்டுமென்று எகிப்திய மன்னர் பரூக் கட்டளை இட்டார்.

பாலைவனப் போரில் எகிப்தியர் களுக்கு அதிக பயிற்சி இல்லாததால் இந்த படையெடுப்பு நகீபிற்கு அவ்வள வாக நம்பிக்கை ஏற்படவில்லை. மேலும் மன்னரும் இத்த விஷயமாக இராணுவ அதிகாரிகளைக் கலந்து ஆலோசிக்கவும் இல்லை. எகிப்தியபடையினர் இஸ்ரேலை எதிர்க்க பாலைவனத்தில் தந்திர சாலிகளான யூதர்களுடன் யுத்தம் செய்தனர். இதுசமயம் பிரிகேடியராக நகீப் உயர்த்தப்பட்டார் பாலைவனப் போர் மிகப்பயங்கரமாக நடைபெற்றது எகிப்தியசேனைகளுக்குப் பின்பலம்

போதுமானதாக இல்லை எகிப்திய மன்னர் இராணுவதளவாட கண்டிராக்டர்களுடன் சேர்ந்து இலாபத்தில் பங்கு போட்டுக்கொண்டதாக தெரியவந்தது பாலைவனப்போரில் ஈடுபட்டுள்ள படை வீரர்களுக்கு சரியான பின்பலம் இல்லை. வெடிமருந்து இல்லை. இராணுவதளவாடங்கள் ஒழுங்காக இல்லை மன்னருக்கு பலமுறைஎடுத்துக்கூறியும் அவர் பாராமுகமாய் இருப்பவர்போல் இருந்துவிட்டார். லஞ்சமே உருவாய் அமைந்த அவர் என்ன செய்யமுடியும்?

யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நகீபின் தோளில் யூதர்களின் குண்டு வந்து தாக்கியது. பிறகு மார்பிலும் ஒருகுண்டு துளைத்தது. அவ்வளவுதான் நகீப் பிரக்ஞையற்று வீழ்ந்தார். வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டார். யுத்தத்தில் எகிப்தியசேனை பின்

வாங்கியது. பல தினங்களுக்குப் பிறகு நகீப் குணமடைந்தார்.

புரட்சி களத்தில் நகீப்

நகீப் பாலஸ்தீனப்போரில் செய்த சேவை எகிப்திய இராணுவ வீரர்களையும் எகிப்திய மக்களையும் கவர்ந்தது எகிப்தியமன்னர்மேல் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் வெறுப்பும் துவேஷமும் வளரலாயின. மன்னர் என்றபதம் இராணுவத்தினர் காதில் விழும் சமயங்களிலெல்லாம் யூதர்களின் குண்டுமாரி ஞாபகத்தில் வரத் தொடங்கியது. போருக்கு அனுப்பிப் பட்டினிபோட்ட மன்னரை நினைத்து வருந்தி வேதனைப்பட்டனர் சில இளம் இராணுவ வீரர்கள் அன்றே மன்னராட்சிக்கு முடிவுகட்ட கங்கணம் கட்டிக் கொண்டனர். அவ்விதம் முடிவு செய்தவர்களில் முக்கியமானவர் 26-வயதான

காப்டன் நாசிர். மக்களாட்சிக்கு பல திட்டங்கள் போட்டு சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டு இருந்தார். இராணு வத்தில் நாசிருக்கு அதிக செல்வாக்கோ பரிச்சயமோ கிடையாது. ஆகையால் இராணுவத்தினரிடமும் பொது மக்களி டமும் செல்வாக்கு பெற்று வந்த நகீ பிடம் தன் திட்டத்தை இரகசியமாக வெளியிட்டார்.

நகீப் ஏற்கனவே எகிப்தில் நல் லாட்சி ஏற்பட சிந்தித்து வந்தவரல் லவா? அவரும் தமக்கு நல்ல சகா கிடைத் தார் எனபூரித்தார் இராணுவத்தில் தம் உயிருக்குயிரான மற்ற இராணுவவீரர் களையும் கலந்து இராணுவ புரட்சிக்கு ஏற்றதினத்தையும் குறித்து விட்டார். மேலும் எகிப்தின் நிர்வாகத்தை உட னுக்குடன் ஏற்று நடத்த எகிப்தின் பழைய பிரதமர்களில் ஒருவரான அலி

மேஹார் பாக்ஷாவையும் தேர்ந்தெடுத்திருந்தார்.

1952ம் வருடம் ஜூலை மாதம் 23ம் தேதி இரவு 1-30 மணிக்கு நகீபின் தலைமையில் இராணுவம் மன்னரின் அரண்மனையை முற்றுகையிட்டு விட்டது. நகீபும் மற்ற வீரர்களும் மன்னரை சந்தித்து முடிதுறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மன்னர் நடுநடுங்கி விட்டார். எதிர்பாராதவிதமாக இவ்விதம் நடைபெறுகிறதே என்று ஏங்கி என்ன செய்வதென்றே தோன்றாமல் திகைத்து கோரிக்கைக்கு இணங்கினர் மேலும் மன்னரின் பட்டம் மன்னரின் குழந்தைக்கு அளிக்கப்படும்என்று கூறினார்கள். இதே நேரத்தில் புரட்சி கோஷ்டியினரில் வேறுபடை மன்னருக்கு செல்வாக்குள்ள சிலரையும், மன்னரின் 11-ஜெனரல்களையும் கைது செய்தனர்

தளவாடசாலை, கஜானா ஆகியவைகளும் முன் திட்டப்படி கைப்பற்றப்பட்டன.

இந்த சமயம் நகீபின் சகோதரர் அலிமுகமது கெய்ரோவில் முக்கியமான இராணுவ உத்தியோகத்தில் இருந்தார். இவரும் கைது செய்யப்பட்டார். நகீபின் சகோதரர் கைது செய்யப் பட்டுள்ள செய்தியை அவருடைய மனைவிக்கு கனியாக தெரிவிக்கவேண்டுமா? என நகீபை கேட்டதற்கு எனது சகோதரன் என்பதற்காக எந்தவித தனிச லுகை யும் காட்ட வேண்டியதில்லை என்றும் மற்ற இராணுவ கைதிகளைப் போலவே நடத்த வேண்டுமென்றும் கூறி னார். நகீபின் பாரபட்சமற்ற செய்கை யை அறிந்தமற்ற வீரர்களும் நகீபின் பாரபட்சமின்மையைக் கண்டு பரவச மடைந்தார்கள்.

சூரிய உதயத்திற்குள் நகீபின் புரட்சி கிரணங்கள் எங்கும் ஒலிக்கத்

தொடங்கின. லஞ்சமும் ஊழலுமாக உருவெடுத்த மன்னார்களுக்கின் ஆட்சி ஒழிந்தது பற்றி மக்கள் பரவசமெய்தினர் மக்கள் திரண்டு வந்து நகீபை சூழ்ந்து கொண்டனர். மக்கள் அலை போல் மோதிவந்து அவர்மேல் மோதினர். மக்கள் சமுத்திரத்தில் நகீப் சிக்குண்டார். மக்களின் அன்பை ஏற்று அவர்களுக்கு தக்கமுறையில் பதிலளித்து மக்கள் சமுத்திரத்திலிருந்து மீண்டார், இதற்குள் மன்னரின் மோச வேலைகள் ஆரம்பமாயினவாம். நகீபை ஒழிக்க துக்கட்ட அன்னியசேனையை அழைத்ததாக தெரியவந்தது. உடனே நகீபும் மற்றவர்களும் கலந்து யோசித்து மன்னரை நாட்டைவிட்டே துறத்துவதென்று முடிவு செய்து இதை மன்னருக்குத் தெரிவித்தனர். அவர் மீண்டும் நிலைகலங்கி உயிரற்ற

பிணமாக செய்வதென்ன வென்று தோன்றாமல் திகைத்து சம்மதிக்க வேண்டியவரானார்.

மன்னர் வெளியேற்றப்பட்டபின் பழைய திட்டத்தை ரத்து செய்து 1953-ஜூன் 18-ல் எகிப்தை குடியரசுநாடாக்கி நகீப் அதன் ஜனாதிபதியானார். பிறகு ஒரு மந்திரிசபையையும் அமைத்துக் கொண்டார் பிரதமர் பதவியும் நகீபிற்கே தரப்பட்டது. 12பேர்கள் கொண்ட சர்வாதிகாரமுள்ளபுரட்சி கவுன்சில் அமைக்கப்பட்டது. புரட்சியின் தந்தையான ஜெனரல் நாசிர் உதவி பிரதமரானார்,

நகீபின் ஆட்சியில் பலசீர் திருத்தங்கள் நடைபெற்றன. அந்த சீர் திருத்தங்களினால ஏழை எளியவர்கள் நகீபை போற்றினார்கள். பழைய மந்திரிகளில் சிலர் லஞ்ச வழக்குகளில் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

மன்னரின் சொத்துக்களை சர்க்கார் மேற்கொண்டது பெரும் தீராத பிரச்சனையாகக் கருதப்பட்ட சூடான் பிரச்சனை தேர்தலில் சூடான் எகிப்துடன் இணைவதென்று பெரும் பாலோரின் ஓட்டுகளால் முடிவு செய்யப் பட்டது. சூடான் எகிப்துடன் இணைந்தது பிரிட்டனுக்கு பெரும் தோல்வி. நகீபிற்கு பெரும் வெற்றியாகும் பிரிட்டன் பிரித்தாளும் திட்டத்திற்கும் இடமில்லையே என ஏங்கியது. நகீப் சீக்கிரம் எகிப்தும் அமெரிக்காவைப் போன்ற குடியரசு திட்டம் பிரகடனம் செய்யப் படும் என அறிவித்தார்.

நகீபின் வீழ்ச்சியும் மீட்சியும்

குடியரசுத் தலைவர் ஜெனரல் நகீபிம் உதவி பிரதமர் நாசிருக்குப

[illegible]ான மனப்புகைச்சல் கிளம்பலா[illegible] 1954 பிப்ரவரி 25ல் நகீப் தனக்கு [illegible] அதிகாரமும் வேண்டுமென்று கேட்ட[illegible] இதை நாசிரும் அவர் சகாக்களும் மெஜாரிட்டியாக உள்ள புரட்சி கவுன்சில் மறுத்துவிட்டது நகீப்தான் வகித்து வந்த எல்லா பதவிகளையும் ராஜிநாமா செய்து விட்டார் நாசிர் நகீபை அவர் வீட்டிலேயே காவலில் வைத்தார் நாசிர் எகிப்தின் பிரதமர் பதவியை ஏற்றார்.

நாசிருக்கு எதிர்ப்பாக பிப்ரவரி 27-ல் புரட்சி கவுன்சில் மெம்பரான கலேத் மொஹிதின் என்கிற அதிகாரியின் தலைமையில் இராணுவத்தில் வலிமையுள்ள பிரிவினரான காவல்ரிப்படையினர் டாங்கிகள் சகிதம் படையெடுத்தனர். இதேசமயம் எகிப்தில் தொழிலாளர்களும் மாணவர்களும் நகீபை ஆதரித்து ஆர்பாட்டம் செய்.

தனர். இத்துடன் சமீபத்தில் எகிப் துடன் இணைந்த சூடானின் மக்களும் நகீபை ஆதரித்து பலமாக கிளர்ச்சி செய்வதாகச் செய்தி வந்தது. கலேத் மொஹிதின் தலைமையில் ராணுவத்தில் வலிமையுள்ள பிரிவினரான காவல்ரிப் படையினர் படையெடுத்தனர். இதே சமயம் எகிப்தில்மக்களும்மாணவர்களும் நகீபை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய் தனர் இத்துடன் இல்லாமல் எகிப்து டன் இணைந்தசூடானியமக்களும் நாசிர் செய்கையை எதிர்த்து பெரும் ஆர்பாட் டம் செய்வதாக செய்திவந்தது,

அவற்றை எல்லாம் பார்த்த நாசி ரும் அவர் சகாக்களும் ஆழ்ந்து யோசித் தனர் தம் கவுரவத்தைவிட தேசகவுர வம் பெரிதெனமதித்து வீட்டில் காவ லில் வைக்கப்பட்டிருந்த ஜெனரல் நகீப் விடுதலை செய்யப்பட்டு முன்

போலவே ஜனாதிபதியாக்கப்பட்டார். ஆனாலும் நகீபிற்கும் நாசிருக்கும் உள்ள பழயமனக்கவலை மாற வில்லை இதனால் எகிப்தில் மக்களிடையே நகீப்பை ஆதரிப்பவர்களும் நாசீரை ஆதரிப்பவர்களும் ஆர்ப்பாட்டங்கள் செய்யத்தொடங்கி விட்டனர். பல பிரமுகர்கள் இருவருக்கிடையே சமரசம் செய்து வைக்க முயன்றார்கள் முடியவில்லை

1954 ஆண்டு அக்டோபர் மாதம் 27 தேதி எகிப்தின் பிரதமரான நாசீர் பொதுக்கூட்டத்தில் இருக்கும் சமயம் சுடப்பட்டார். ஆனால் தப்பித்துக் கொண்டார் சுட்டவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதில் நகீபிற்கும் சம்பந்தம் உண்டென சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார் சூடான் தூது கோஷ்டியினரின் விருப்பப்படி அவர்மீது வழக்கு தொடுப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.

எமது பிரசுரங்கள்

★

1.	1886 மே தின புரட்சி	0-1-0
2.	எகிப்தின் புரட்சி வீரர் ஜெனரல் நகீப்	0-1-0
3.	உழைப்பால் உயர்ந்த காமராஜ்	0-1-0
4.	அகிம்சா புரட்சிவீரர் விநோபாபாவே	0-1-0
5.	தூக்கிலே தொங்கிய வீரர் குதிராம் போஸ்	0-1-0
6.	ஜவகரின் சிறைவாசங்கள்	0-1-0
7.	வீரத்தியாகி திருப்பூர் குமரன்	0-1-0
8.	பயங்கர பஞ்சாப் படுகொலை	0-1-0
9.	ஜெனரல் நீலனின் கொடுங்கோன்மைகள்	0-1-0

விபரங்களுக்கு,

சகுந்தலா பதிப்பகம்

225-காந்திரோடு, :: காஞ்சிபுரம்.